# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 11 | இலக்கிய நயம்<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

முதலாம் பகுதியிலுள்ள வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள வினாக்களுக்கும், மூன்றாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.

**01. 01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

01) சின்னமகள் யாரால் 'லிஸி' என அழைக்கப்பட்டாள்?

02) "ஒண்ணு கூட மிஞ்சல்லே அப்படியே எறங்கிட்டுது" இக் கூற்று யாரால் யாருக்கு எச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

03) "தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு" என்னும் கூற்றினை உரைத்தவன் யார்?

04) உமறுப்புலவர் சீறாப்புராணத்தின் மூலம் பேணிக்கொண்ட இரு மரபுகளும் எவை?

05) "கண்ணிரெண்டும் தோற்றவன் இருக்கின்றானே" இக்கூற்றில் தோற்றவன் எனக் குறிப்பிடப் படுபவன் யார்?

06) 'சிங்களத்து மருத்துவிச்சி' என்ற சிறுகதையில், வரும் வைத்திய அதிகாரிக்கு வழங்கப்பட்ட சரியான பெயர் என்னவெனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

07) "யூலிய சீசர் கருமங்களை எண்ணியே துணிவான். துணிந்த பிறகு துருவ நட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றும் தான் அசையான்" இங்கு இடம்பெற்றுள்ள அணி எது?

08) "நிறைநீர் நீரவர் கேண்மை..." என்னும் குறள் அடியின் பொருள் யாது?

09) "தேருளைப்புரவி வா ரணத்தொகுதி திறை கொணர்ந்து வருமன்ன..."

இப் பாடல் வரியின் பொருளை எழுதி அதன் சிறப்பினைக் குறிப்பிடுக.

10) 'மழைக்கை' என்னும் நாடகத்தின் ஆசிரியர் யார்?

(2×10=20 புள்ளிகள்)



kalvi.lk

**02. பின்வரும் செய்யுட்களினதும், உரைப்பகுதிகளினதும் பொருளை உங்கள் மொழிநடையில் எழுதி, தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.**

i)

**மஞ்ச ளாவிய மாடங்க டோறும்**
**மயில்கள் போன்மட வார்கணஞ் சூழ**
மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
யன்ன வன்னக் குழாம்விளை யாடுந்
துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
சுறாக்க னோடிப் பலாக்கனி கீறி
யிஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழு
மீழ மண்டல நாடெங்கனாடே.

ii)

**புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு**
**கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்** - இன்னருள் கண்
டஞ்சினா னாவி யழிந்தான் அறிவுயிர்த்து
நெஞ்சினாலெல்லாம் நினைத்து

iii)

வந்து முனி எய்துதலும் மார்பில் அணி ஆரம்
அந்தர தலத்து இரவி அஞ்ச ஒளிவிஞ்ச
**கந்த மலரில் கடவுள்தான் வரவு காணும்**
**இந்திரன் என, கடிது எழுந்து அடி பணிந்தான்**

iv) **செந்தமிழ் வானிலே செங்கதிர் பாரிக்கும் சீர்மிகு பகலவனாய்த் திகழ்கின்றது சீறாவென்னும் பெருங்காப்பியம் எத்திசையும் புகழ்மணக்கும்.** இவ்வினிய நூலை இயற்றருளிய மாதவச்செல்வர் உமறுப்புலவர் என்னும் ஓங்கிய கீர்த்தியின் உயர்ந்த நாவலராவர். இப்புலவர் கோமான் ஐவகை இலக்கணங்களையும் ஐயந்திரிபறக்கற்ற சான்றோராவர்.

v) **யூலியசீசர் உரோமபுரிக்கு அரசன்; மகாபராக்கிரமசாலி கருமங்களை எண்ணியே துணிவான். துணிந்த பிறகு துருவ நட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றுந் தான் அசையான் ;** உயிரிழக்க நேர்ந்தாலும் 'அச்சம்' என்றொரு பண்டம் அவனுக்கு தெரியாது. வீரன் ஒரு தரம் இறக்கிறான்; பயங்காளி நூறுமுறை சாகிறான் என்று சொல்லிச் சீசர் சிரிப்பான்.

(5×5=25 புள்ளிகள்)

## பகுதி - II

**03. கீழ்க் காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**தேருளைப்புரவி வா ரணத்தொகுதி நிறைகொணர்ந்து வருமன்னநின்**
**தேசமேதுனது நாமமேது புகல்செங்கையாழ் தடவு பாணகேன்**
**வாருமொத்த குடிநீரு நாமுமக தேவனாறை நகர்காவலன்**
**வாணபூபதி மகிழ்ந் தளிக்கவெது வரிசைபெற்று வருபவன்யான்**
**நீருமிப் பரிசுபெற்று மீளவர வாகுமேகுபவன் முன்றில்லாய்**
**தித்திலச்சிகர மாடமாளிகை நெருக்கு கோபுர மருங்கெலாம்**
**ஆருநிற்கு முயர்வேம்பு நிற்கும் வளர் பனையுநிற்கு மதனருகிலே**
**அரசுநிற்கு மரசைச்சுமந்த சிலவத்திநிற்கு மடையாளமே.**



kalvi.lk

1) இப்பாடல் எவ்வகைச் செய்யுள் இலக்கியம்?
2) எந்த மன்னனிடம் புலவன் பாணனை வழிப்படுத்துகிறான்?
3) "ஒத்தகுடி நீரும் நாமுமாகி..." என்பதன் பொருள் யாது?
4) புலவர் ஏன் வேந்தே! என விளிக்கப்படுகிறார்?
5) மன்னனது இருப்பிடம் செல்ல புலவர் கூறிய அடையாளம் யாது?

(5×5=25 புள்ளிகள்)

**அல்லது**

**கீழே தரப்பட்டுள்ள உரைநடைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

நாட்டார் பாடல்களுக்கு தனிச் சிறப்பைத் தருவது அவற்றின் இசையின்பமே எனலாம். இசை என்னும் சிறகு இருப்பதாலே இப்பாடல்கள் அவை தோன்றும் வட்டார எல்லைகளைக் கடந்து விரைவிலே நாடெங்கும் பரவிவிடுகின்றன. இலட்சக்கணக்கான நாட்டு மக்கள் இசையையே நயந்து இன்புறுகின்றனர். இப்பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருப்பதோடு, சொற்சுவையும் பொருளும் பொருந்தியிருப்பதால் நாட்டின் கலாசார பாரம்பரியச் செல்வமாகத் திகழ்கின்ற நாட்டுப்பாடல்கள் பெரும்பாலும் பொழுதுபோக்கிற்காகவும் உழைப்பாளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகவும் பாடப் படுவன. மக்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில் புரியும்போது, பாடும் பாடல்களின் இசை அவர்களின் உளச்சோர்வையும் உடற்சோர்வையும் போக்கி, தொழிலைத் திறம்படச் செய்வதற்கு உதவி புரிகின்றது.

தொழிலாளர்கள் பாடலின் ஒத்திசைக்கு ஏற்ப தம் உடலை இயக்கி ஒருங்கிசைந்து வேலை செய்வதால் வினைத் திறமை மிகுகின்றது. ஓடம் செலுத்துவோர் பாடல், வலையிழுப்போர் பாடல், நெல்லுக் குத்தும் பெண்களின் பாடல், ஏற்றம் இறைப்போர் பாடல் என்பவற்றிலே இதற்கு உதாரணங் காணலாம். இத்தகைய பாடல்களில் பொருளற்ற "ஏலேலோ ஐலசா" என்பது போன்ற சொற்கள் ஒத்திசைச்சந்தத்தை தாய்மார் "ஆராரோ ஆரிவரோ" என்று சந்தம் அமைத்துப் பாடுகின்றனர். முன்னைய சந்தம் உடலில் முறுக்கேறித் தொழில் செய்வதில் உற்சாகத்தைத் தூண்ட பின்னைய சந்தம் குழந்தையின் உடல் முயற்சிகளை ஒடுக்கி உறங்கச் செய்து விடுகின்றது.

1) நாட்டார் பாடல்கள் எதனால் எவ்வாறு பிரபல்யம் அடைகின்றன?

2) நாட்டார் பாடல்களின் சொற்சுவையும் பொருழாழமும் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

3) அ) தொழிலாளர் பாடல்களாக இங்கு குறிப்பிடப்பட்டவற்றுள் இரண்டினைத் தருக.
   ஆ) தொழிலாளர்களின் வினைத்திறமை மிகுவதற்கு நாட்டார் பாடல்கள் எவ்வாறு துணைபுரிகின்றன?

4) நாட்டார் பாடல்களில் வரும் பொருளற்ற சொற்களுக்கு உதாரணம் தருக.
   "அவை பொருளற்றவை எனினும் பயன் தருபவை" இக்கூற்றினை விளக்குக.

5) 1) இப்பந்தியின் மையக்கருத்து யாது?
   2) அக்கருத்தை ஆசிரியர் எவ்வாறு வளர்த்துச் செல்கிறார்?

(5×5=25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - III

**எவையேனும் 2 வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புருட்டஸின் மரணம் பற்றியும் பாண்டிய மன்னன் மரணம் பற்றியும் கதையாசிரியர் கொண்டுள்ள எண்ணக்கருத்தினை உமது மொழிநடையில் தருக. (15 புள்ளிகள்)

2. 'சிங்களத்து மருத்துவிச்சி' என்னும் சிறுகதையில் இடம்பெறும் டாக்டர் பாத்திரத்தின் மனிதநேயம் சித்திரிக்கப்படு மாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

3. 'கோளுரை' என்னும் கவிதையூடாக விதியை விட விடாமுயற்சியும் கடின உழைப்புமே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படை என்னும் கருத்தினை கவிஞர் எவ்வாறு விளக்கிக் கூறுகிறார் என்பதை ஆதாரங்களுடன் தருக.

   (15 புள்ளிகள்)

4. 'காலைக்காட்சி' என்னும் கவிதையில் காலைக்காட்சியின் அழகினை புலவர் விபரிக்குமாற்றினை விளக்குக.

   (15 புள்ளிகள்)

5. 'புல்' என்ற தலைப்பில் அமைந்த கவிமணியின் கவிதை புல்லின் சுயசரிதையாகும்.

   அ) 'புல்' கூறுவதை சுயசரிதை வடிவத்தில் எழுதுக.
   ஆ) இக்கவிதை ஊடாக கவிஞர் புலப்படுத்தியுள்ள விழுமியக் கருத்துக்கள் எவை?

   (15 புள்ளிகள்)

6. கம்பராமாயணக் கையடைபடலத்தில் இராமன் மீது தசரதன் கொண்டிருந்த பாசம் வெளிப்படுத்தப்படு மாற்றினை விளக்குக.

   (15 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page